பட்ட பல்கலைக்கழகத்தை ஆலோசித்து அங்கீகாரத்தைக்கூட ரத்து செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்வோம் என்பதைத்தான் நான் இங்கே தெரிவித்துள்ளேன்.

(ஆ) பெத்தநாய்க்கன்பாளையத்தில் ஆழ்துளை குடிநீர் குழாய் கிணறுகள் பழுதுபார்க்கப்படாமை குறித்து.

திரு. சி. பழனிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"பெத்தநாய்க்கன்பாளையத்திலுள்ள ஆழ்துளை குடிநீர் குழாய்க் கிணறுகள் பழுதுபார்க்கப்படாததால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் 8 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு, அவைகளில் கைப்பம்புகளும் பொருத்தப்பட்டுள்ளன. தற்சமயம் மேற்கூறிய 8 கைப்பம்புகளில் 1, 6 மற்றும் 9 வார்டுகளிலுள்ள கைப்பம்புகள் பழுதடைந்த நிலையிலுள்ளன. மீதமுள்ள 5 கைப்பம்புகள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

அரசு அங்கிகரித்த கைப்பம்புகள் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகள் மற்றும் ஊராட்சிகளிலுள்ள சிற்றூர்களிலும், குடிநீர் வடிகால் வாரியத்தாலும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், சமுதாய நலத் துறை ஆகிய அமைப்புகளால் நிர்மாணிக்கப்பட்ட ஆழ்துளை குழாய்க் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள கைப்பம்புகளின் பராமரிப்பை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுள்ளது. ஆகவே, பேரூராட்சிகளிலுள்ள கைப்பம்புகளின் பராமரிப்பு அந்தந்த பேரூராட்சிகளைச் சாரும். ஆகவே, பெத்தநாயக்கன்பாளையத்திலுள்ள பழுதடைந்த 3 கைப்பம்புகளைப் பராமரிப்பது, அந்த பேரூராட்சியைச் சார்ந்ததாகும். மேலும் அரசுக்கு கைப்பம்புகள் பழுதுபார்க்காமல் இருப்பது குறித்து தகவல் கிடைத்தவுடன், அவைகளை உடனே பழுதுபார்த்து இயங்க வைக்குமாறு குடிநீர் வடிகால் வாரியத்தை அரசு கேட்டுக்கொண்டுள்ளது. விரைவில் அவை சீர் செய்யப்படும்.

திரு. சி. பழனிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, பெத்தநாயக்கன் பாளையம் பேரூராட்சியிலுள்ள ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளில் 3 பழுதடைந்து பல மாதங்களாகிவிட்டன. அவைகளைப் பழுதுபார்க்க வேண்டுமென்று ஆழ்துளை குழாய்க் கிணறு மேலாளரிடம் கூறினோம். ஆனால், அவர் பழுதுபார்க்கவில்லை. பேரூராட்சியே பழுதுபார்க்க வேண்டு மென்று அமைச்சர் கூறி உள்ளார்கள். ஊராட்சிகளுக்குப் பழுதுபார்ப்பதைப் போல், பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பழுது பார்க்க வேண்டுமென்கிறேன். பேரூராட்சி ஊழியர்களால் அதனைப் பழுது பார்க்கும் வேலையைச் செய்ய முடியாது. ஆகவே, ஆழ்துளை குழாய்க் கிணறுகளைச் செய்கின்ற நிறுவுகின்ற குடிநீர் வடிகால் வாரியமே பழுது பார்த்து கொடுத்தால் அதற்கான கட்டணத்தை நாங்கள் செலுத்துகிறோம். அதை உடனடியாகச் செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆலோசனை அரசால் பரிசீலிக்கப்படும். இப்பொழுது பழுதுபார்க்க வேண்டு மென்று அரசு கேட்டுக்கொண்டுள்ளது என்று சொல்லியுள்ளேன். விரைவில் அவை சீர்செய்யப்படும் என்று கூறி உள்ளேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 10-00]

(இ) சின்னசேலம் பேரூராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு குறித்து.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

"தென்னார்காடு மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாட்டினால் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, தென் னார்காடு மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியத் திட்டம் பற்றி விரிவான ஆய்வு செய்யப்படுகிறது. கோமுகி நதி அணையி லிருந்து தண்ணீர் கொண்டு வரக்கூடிய சாத்தியக்கூறுகளும் மற்றும் பொருளாதார வசதி பற்றி விரிவாக ஆராய்ந்து திட்டம் தயாரித்த பின்னர் முறைப்படி அரசு ஆட்சி ஒப்புதல் (administrative approval) வழங்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சின்ன சேலம் நகரத்திற்கு கோமுகி நதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்படுவதாக உள்ளதா அல்லது மணிமுத்தாறு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்